

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
# இலகுவழி மாதிரிப் பரீட்சை - 22



**ஆசிரியர் : P.அம்பிகைபாகன்**


**இடம் : ACA, ஆசிரியரின் வீட்டில்**
**குழு வகுப்புக்களில்**


**1. வினாவில் உள்ள நான்கு தவளைகள் நான்கு தடவைகளில் பாயும் அளவுகள் தரப்பட்டுள்ளன. அதிக தூரம் செல்லக்கூடிய தவளையைச் சுற்றி வட்டமிடுக.**

1.



2.



3.



4.



**கீழே கொடுக்கப்பட்ட சொற்களை ஏற்ற இடத்திலே வைத்து வசனத்தைப் பூரணப்படுத்துக.**

| கிலி, கிளி, கிழி, வால், வாழ், வாள், பாழ், பால், தோல், தோள் |
|---|

2. புலியிடமுள்ளது ..............................
   நீ நீடூழி ..............................
   மரத்தை அறுப்பது ..............................

3. பயத்தினால் மனதில் ........................................................................ பிடித்தது.
   சிறுவர்கள் மரத்திலிருந்த ........................................ யைப் பிடித்தார்கள்.
   தம்பி புத்தகத்தை ......................................................................த்து விட்டான்.

4. குழந்தை ........................................................................................... குடித்தது.
   பயன்படுத்தாத கட்டடம் ............................................................ அடைந்தது.

5. தோழன் ....................................................................... கொடுத்து உதவினான்.
   வாழைப்பழத்தை .......................................... உரித்துச் சாப்பிடவேண்டும்.

**வினாக்களுக்கான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

6. கமலின் ஏக புத்திரனான விமலன் அண்ணனுடனும் தம்பியுடனும் பாடசாலைக்குச் சென்றான். இவ்வாக்கியத்தில் உள்ள தவறு யாது?
   ..........................................................................................................................................

7. தற்பொழுது அறுபது வயதாகவிருக்கும் விமலா ஐம்பது வருடங்களுக்கு முன் தனது முப்பதாவது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடினாள். இவ்வாக்கியத்தில் உள்ள தவறு யாது?
   ..........................................................................................................................................

**தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகச்சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

8.
   1. மழையைப் பெறுவதற்கு மனிதனுக்கு காடுகளை அழிக்காதிருத்தல் அவசியமாகின்றன.
   2. காடுகளை அழிக்காதிருத்தல் மனிதனுக்கு அவசியமாகின்றன மழையைப் பெறுவதற்கு
   3. மனிதனுக்கு மழையைப் பெறுவதற்கு காடுகளை அழிக்காதிருத்தல் அவசியமாகின்றன.

9.
   1. இலங்கை நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும்.
   2. நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும் இலங்கை.
   3. இலங்கை ஒரு தீவாகும் நான்கு புறமும் கடலால் சூழப்பட்டன.

10. இடி மின்னலுடன் மழைபெய்யும் போது இடி மின்னல் ஒரே நேரத்தில் ஏற்பட்டாலும் எமக்கு மின்னல் வெளிச்சம் முதலில் தெரிந்து அதன் பின்னர் இடிச்சத்தம் கேட்பதற்கான காரணம் யாது?
   ..........................................................................................................................................

**சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

11. கோழி முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவர கோழி முட்டைகள் எத்தனை நாட்களுக்கு அடைகாக்கப்பட வேண்டும்?
    1. 21 2. 28 3. 31

12. காகத்தின் கூட்டில் களவாக குயில் முட்டையிடும். காகம் அம்முட்டைகளையும் அடைகாத்து குஞ்சு பொரிக்க வைக்கும், காகம், குயில் முட்டைகளின் நிறம் யாது?
    1. இளம்பச்சை 2. இளம்மஞ்சள் 3. கறுப்பு

| **சேதனப் பசளைகள், காபனீரொட்சைட்டு, ஒட்சிசன், பச்சையம்** |
|---|

**சரியான விடைகளை அடைப்பில் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

13. மனிதன் சுவாசத்தின் போது ......................................... உள்ளெடுத்து ................................ வெளிவிடுவான்.

14. தாவரங்கள் சுவாசத்தின் போது ............................................ உள்ளெடுத்து ................................................. வெளிவிடும்.

15. தாவரங்கள் உணவு தயாரிக்கும் போது ....................................... உள்ளெடுத்து ............................... வெளிவிடும்.

16. பச்சை நிறத்தாவரங்கள் உணவு தயாரிக்கும் இடம் ................................................................ எனப்படும்.

17. வீட்டுத்தோட்டத்திற்குப் பயன்படும் மாட்டெரு, ஆட்டெரு, கோழி எரு, வீட்டெரு என்பவற்றைக் குறிக்கும் ஒரே சொல் ............................................................. ஆகும்.

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

18. காகம் கரையும், கோழி கொக்கரிக்கும், நாய் எவ்வாறு ஒலி எழுப்பும்?
    1. குரைக்கும் 2. கடிக்கும் 3. உறுமும்

19. பசு ஈனுவது கன்று, அணில் ஈனுவது குஞ்சு, சிங்கம் ஈனுவது எது?
    1. குட்டி 2. குருளை 3. குஞ்சு

20. மக்கள்கூட்டம் கும்பல், ஆட்டுக்கூட்டம் மந்தை, தென்னைக்கூட்டம் யாது?
    1. தோப்பு 2. குவியல் 3. கும்பல்

21. மிகச்சிறிய பின்னத்தை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

$\frac{4}{10}$ , $\frac{33}{100}$ , $\frac{76}{100}$ , $\frac{9}{10}$ ...............................................................

22. மிகச்சிறிய தசம எண்ணைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
    0.93 , 0.09 , 0.19 , 0.4 ...............................................................

**பாடல்கள் இரண்டையும் கவனமாக வாசித்த பின்பு அதன் கீழுள்ள வினாவுக்கான விடையைத் தெரிவு செய்க**

1.
சின்னஞ்சிறு வில்லாய்க் கண்டதம்மா! - பின்னர்
செம்பொற்குடம் போல தோன்றுதம்மா!
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர ஜாலமோ கூறாயம்மா?

2.
அம்மா வெளியே வாஅம்மா
அழகாய் மேலே பாரம்மா
சும்மா இருந்த சந்திரனைத்
துண்டாய் வெட்டியது யாரம்மா?

23. இரு பாடல்களுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
    1. முதற்பாடல் பிறையைக் கண்டபின்பு முழுமதியைக் காண்பதையும், இரண்டாம் பாடல் முழுமதியை கண்டபின்பு பிறையைக் காண்பதையும் குறிக்கின்றன.
    2. முதலாம் பாடல் அதிசயமான நிகழ்வு, இரண்டாம் பாடல் பாதகமான நிகழ்வு.
    3. முதற்பாடல் முழுமதி தேய்பிறையானதையும் இரண்டாம் பாடல் வளர்பிறை முழுமதி யானதையும் குறிக்கின்றன.

**24 முதல் 32 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

24. இரவு வேளைகளில் சுருங்காத இலை எது?
    1. புளியம் இலை 2. தொட்டாற்சுருங்கி இலை 3. அகத்தி இலை
    4. முருக்கம் இலை

25. மாலை கட்டப் பயன்படாத பூ எது?
    1. செம்பரத்தைப் பூ 2. கனகாம்பரப் பூ 3. தென்னம் பூ
    4. மல்லிகைப் பூ

26. இந்துக்களின் சமயநிகழ்வுகளில் பயன்படுத்தாத இலை எது?
    1. வாழையிலை 2. வேப்பமிலை 3. மாவிலை
    4. பாவட்டமிலை

27. அணில் விரும்பி உண்ணாத பூ எது?
    1. கறிமுருங்கைப்பூ 2. வாழைப்பூ 3. புளியம்பூ
    4. இலுப்பைப்பூ

28. அன்றாடம் மனிதன் வேலை செய்வதற்குத் தேவையான சக்தியைப் பெற உகந்த போசணைச் சத்து எது?
    1. இரும்புச்சத்து 2. புரதச்சத்து
    3. மாப்பொருட்சத்து 4. விற்றமின்கள்.




29. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தரமான பொருட்களுக்கு வழங்கப்படும் தரச் சான்றிதழ் யாது?
    1. SLS 2. ISO 3. ISBN 4. PHI

30. தெறி ஓட்டையைத் தைப்பதற்குப் பயன்படும் தையல் எது?
    1. பெரு நூலோடி 2. சிறு நூலோடி 3. சோம் தையல் 4. கம்பளித்தையல்

31. ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற பின் முதன் முதலாக இலங்கையின் தேசியக்கொடியை ஏற்றியவர் யார்?
    1. ஜெ. ஆர். ஜெயவர்த்தனா 2. பிரேமதாசா
    3. டி. எஸ். சேனாநாயக்கா 4. அமிர்தலிங்கம்

32. இலங்கை அரச இலச்சினையில் காணப்படாதது எது?
    1. பூரண கும்பம் 2. அரசு இலை 3. தர்ம சக்கரம் 4. மலர் இதழ்

33. பின்வரும் உருக்களில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கையை எழுதுங்கள்.

1. 
2. 
3. 

............................ ............................ ............................

34. பின்வரும் ஒவ்வொரு உருவிலும் Aக்கு எத்திசையில் B உள்ளார் என்பதை எழுதுங்கள்.

1. 


2. 


3. 


4. 



............................ ............................ ............................ ............................

35. பின்வரும் ஒவ்வொரு உருவிலும் உள்ள கடிகார முகங்களில் குறித்த நேரத்தை மணி, நிமிட முள் கீறிக் குறித்துக் காட்டுக.



9.00


4.30


3.45



11.55

36. பின்வரும் ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்களும் கொண்டுள்ள பரப்பளவு எத்தனை சதுரங்கள் என எழுதுங்கள்.



............................ ............................ ............................

37. ஒரு மனிதனின் இரு கைகளையும் பெருவிரல் உள்ளே மடித்த நிலையில் உள்ள படத்தில் சாதாரண வருடமொன்றின் 12 மாதங்களையும் எழுதி அவை கொண்டுள்ள நாட்களையும் எழுதுங்கள். (உங்கள் வசதிக்காக ஜனவரி மாதம் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.)




ஜனவரி 31 நாட்கள்கள்
............................ ..........................................
............................ ..........................................
............................ ..........................................
............................ ..........................................
............................ ..........................................
............................ ..........................................
............................ ..........................................
............................ ..........................................
............................ ..........................................
............................ ..........................................
............................ ..........................................


38. ஒரு வருடத்தின் ஆவணி மாத நாட்காட்டியின் நிரப்பப்படாத தினங்களை நிரப்பவும்.

| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| | | | 01 | | | 04 |
| | | 07 | | | 10 | |
| | | | 15 | | | 18 |
| 19 | | | | 23 | | |
| 26 | | | | 30 | | |

39. ஒவ்வொரு வினாவிலும் இரு சம பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ள உருவின் கீழ்க் கீறிடுக.



40. 4 லீற்றர் கொள்ளளவுள்ள இக்கலனில் 250ml கொள்ளக்கூடிய அளவையால் எத்தனை தடவைகள் நீர் நிரப்பினால் பாத்திரம் பூரணமாகும்?




..........................................